கிறது என்று கனம் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதன் மூலமாக என்னென்ன கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது?

கனம் திரு. வெ. ராமையா: அதனுடைய ரிசல்ட்டைப் பொறுத்தவரையில்: இந்த நிலையம் சென்னை நகரத்திற்கே பெரும் உதவியாக இருக்கிறது. பல வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்ட பாலங்கள் இன்றைக்கு இருக்கக்கூடிய அமைப்பு முறையிலே அமையாத காரணத்தினால், ஹெவி டிராபிக் எடுத்துக் கொள்ள முடியுமா என்ற சந்தேகம் இருந்தது. இந்த நிலையம் அதை நன்கு பரிசீலனை செய்து, சுமார் 50 அல்லது 100 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்ட பாலங்களாக இருந்தாலும், இப்பொழுது இருக்கக் கூடிய லோடு பாக்டருக்குப் போதுமான உதவி தரும் என்ற முடிவுக்கு வந்திருக்கிறது. அந்த முடிவுப்படி பார்த்தால் சென்னை ராஜ்யத்திற்கே பல கோடி ரூபாய் லாபமாக இருக்கும். இந்த உதவியை அகில இந்தியாவுக்கும் கொடுப்பதனால், நமது தேசத்திற்கே ஒரு பெரிய லாபமாக இருக்கிறது. இந்த நிலையம் நமது ராஜ்யத்தில் அமைந்திருக்கிறது. இன்னும் பல ஆராய்ச்சிகளிலும் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். இதைப் போய்ப் பார்க்கக் கூடிய நிபுணர்கள் அத்தனை பேரும் இது நிச்சயமாக சென்னை ராஜ்யத்திற்கும், அகில இந்தியாவுக்கும் பேருதவியாக இருக்கிறது, இன்னும் இதை விரிவு படுத்த வேண்டும் என்ற அபிப்பிராயத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்.

* 375 *Q.*—SRI K. MOOKIAH THEVAR: Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether any Central grant is being given to the Highways Research Station at Madras; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI V. RAMAIAH: (*a*) Yes.

(*b*) Rs. 5,000 for 1957–58, Rs. 13,500 for 1958–59 and Rs. 15,000 for each of the four years from 1959–60 to 1962–63.

* 376 *Q.*—SRI K. MOOKIAH THEVAR: Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) how many officers of the Highways Research Station at Madras have been kept in Madras City for more than five years; and

(*b*) why the usual practice of transferring officers after a certain period has not been followed in their cases?

THE HON. SRI V. RAMAIAH: (a) Two officers, viz., the Director and the Assistant Engineer of the Highways Research Station have been kept in the same posts for more than five years.

(*b*) The policy of periodical transfer will not apply in the case of the Director who is in the grade of Superintending Engineers. Further, continuity of service is essential for efficient research work in the Station. The Assistant Engineer has completed 5 years of service on 23—5—1963. The question of

continuing him for another year for administrative reasons is under consideration.

Highways Department

* 377 *Q.*—SRI K. B. PALANI : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) the number of officers above the rank of the Executive Engineers in the Highways Department who were given extension of service or re-employed during 1962–63 and 1963–64 ; and

(*b*) the number of Assistant Engineers who were reverted during 1962-63?

கனம் திரு. வெ. ராமையா : *(அ) 1962-63 ஓர் அதிகாரி, 1963-64 ஓர் அதிகாரி.*

(இ) ஒருவருமில்லை.

தேசிய சேமிப்புத் திட்டம்

* *378 கேள்வி.*—**திரு. இராம. அரங்கண்ணல் :** *கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) தேசிய சேமிப்புத் திட்டத்துக்கென உள்ள மாநில ஆலோசனை போர்டின் அங்கத்தினர்கள் யார்?

(இ) கடந்த ஓராண்டில் அந்தப்போர்டு ஆற்றிய பணிகள் யாவை?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) A list [a] of the members of the Madras State Advisory Board for National Savings is placed on the table of the House.

(*b*) The Advisory Board has met four times and discussed ways and means of promoting Small Savings.

Apart from attending the meetings of the State Advisory Board the members associate themselves with the savings movement in their respective areas and maintain contact with the authorised agents, Officials of National Savings Organisation and other State and Central Officials. The members assist in the conduct of meetings for Small Savings, enrolment of agents, group discussions, and formation of savings groups and publicity, etc. Each member has been allotted a definite area for this purpose. The Vice-Chairman of the Advisory Board tours the whole State. In the course of her tours she visits industrial undertakings, Commercial Concerns, Government and other offices and seeks to get Pay Roll Savings Groups formed in these institutions and offices.

திரு. இராம. அரங்கண்ணல் : இந்தச் சேமிப்புத் திட்டத்திற்கு எதிர்க்கட்சியைச் சார்ந்த ஒருவரைத் துணைத் தலைவராகப் போட்டிருக்கிறார்கள். அந்தப் பெருந்தன்மையை நான் வரவேற்கிறேன். அதே சமயத்தில் இந்த நான்-அபிஷியல் உறுப்பினர்களாக இருக்கிறவர்களில் பல எம்.எல்.ஏ-க்கள் காங்கிரஸ்காரர்களாக இருக்

[a] Printed as Appendix I on pages 526–527.